
## திராவிடத்தால் வாழ்கிறோம்

879

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

10

# குத்தகை விவசாயிகளைப் பாதுகாத்த கலைஞர்!



கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

*1957-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 28-ஆம் தேதி, குளித்தலை அருகே நங்கவரம் கிராமத்தில் தொடங்கியது குத்தகை விவசாயிகளின் அறப்போராட்டம். போராடும் மக்களின் கைகளில் மண்வெட்டியும், அரிவாளும், ஏர் கலப்பையும் இருந்தாலும், அவை யாரையும் காயப்படுத்தவில்லை. பண்ணையார்களிடமும் அத்துமீறல் இல்லாத அறப்போராட்டம். எழுதப் படிக்கத் தெரியாத அந்த மக்களின் மனதில் உரிமைவேட்கை மட்டும் கொழுந்துவிட்டு எரிந்தது. இருபது நாட்கள் இடைவிடாத போராட்டம். போராட்டத்துக்குத் தலைமை ஏற்றிருந்தவர் கலைஞர்.*

### களத்தில் விவசாயிகளுடன்

*‘வெளியூர் ஆட்களை வைத்து வேலையைத் தொடங்குவோம்’ என பண்ணையார் எச்சரித்தபோது, ‘பண்ணை வயல்களில் எருதுகளாக நாங்களே இறங்குவோம்’ என எதிர் அறிவிப்பினை வெளியிட்டார் கலைஞர். நங்கவரம் கிராமத்தைச் சுற்றி, துப்பாக்கி ஏந்திய போலீசார் குவிக்கப்பட்டனர். எதற்கும் அஞ்சாத கலைஞர், தோளில் கிடந்த துண்டை எடுத்து தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டு, நிலத்தில் இறங்கி ஏர்க்கலப்பையை பிடித்து உழத் தொடங்குகிறார். அவ்வளவுதான், மக்களின் உரிமை முழக்கம் விண்ணைப் பிளக்கிறது. பதற்றம் தொற்றுகிறது. உயர் அதிகாரிகள் விரைகிறார்கள். போராட்டத்தின் கட்டுப்பாடு, மக்களின் விடாமுயற்சி காரணமாக பண்ணையார்களுக்கு இறங்கி வருவது தவிர வேறு வழியில்லை.*

*பேச்சுவார்த்தையில், குத்தகைதாரர்களுக்கும், கூலி விவசாயிகளுக்கும் நிலங்களைப் பகிர்ந்து கொடுக்க ஒப்பந்தம் ஆகிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் நிலம் சொந்தமானது.*

*இப்போது, நங்கவரத்தில் அனைத்து சாதியினருக்கும் சொந்தமாக நிலம் உள்ளது. கலைஞரின் ஈடு இணையற்ற போராட்ட குணத்துக்கு நங்கவரம் போராட்டமும் சாட்சியமாக உள்ளது.*

### சட்டமன்ற உறுப்பினராக

*குத்தகை விவசாயிகளின் பெரும் துயரத்தை, சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி, சட்டமியற்ற வலியுறுத்திய கலைஞர், தான் முதல்வராகப் பொறுப்பேற்றதும் செய்த முக்கிய சட்டத் திருத்தம் குத்தகைதாரர் நில ஆவணச் சட்டம் (Tenancy Land Record Act 1969) . 1970-ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டம் அமல்படுத்துவதற்கு முன்பே கலைஞர் நடத்திய சட்டப் போராட்டம், சட்டமன்றப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்கது*

### தமிழ்நாடு குத்தகை உரிமை ஆவணச் சட்டம்.

*அறக்கட்டளைகள் வழியாக நிலங்களைக் கையில் வைத்திருந்த பெரும் நில உடைமையாளர்கள், அந்த நிலங்களை குத்தகைதாரர்கள் வழி விவசாயம் செய்து சுரண்டி வந்தனர். குத்தகைதாரர் நிலத்தில் பயிர் செய்தாலும், கூலி விவசாயிபோலத்தான் நடத்தப்பட்டு வந்தனர். அதற்கு எதிராகத்தான் நங்கவரத்தில் போராடினார் கலைஞர்.*

*நில உடைமையாளர்கள் - குத்தகைதாரர் உரிமை தொடர்பான பல வழக்குகள் வருவாய் நீதிமன்றங்களில் தேங்கிய நிலையில், குத்தகைதாரர்கள் சட்டத்தில் மிக முக்கிய திருத்தத்தைக் கொண்டு வந்தார் கலைஞர். அதன்படி, வருவாய் அதிகாரிகள் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று குறைதீர்க்கும் கூட்டங்களை நடத்தினர். குத்தகைதாரர்கள்- துணை குத்தகைதாரர்களிடம் குறைகளைக் கேட்டறிந்து பட்டியலிட்டனர். மற்றொரு பக்கம், அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒழுங்கு முறைக்குழு உருவாக்கப்பட்டு, பண்ணையாட்கள் மற்றும் பண்ணையார்களிடம் கருத்து கேட்கப்பட்டது.*

*அந்த விவரங்கள்படி குத்தகை உரிமைகள் மாற்றியமைக்கப்பட்டன.*

### சாட்சியங்களே ஆவணம்

*குறிப்பாக, கலைஞர் அளித்த நுட்பமான சட்டத் தீர்வில், ஆவணங்களைக் கொண்டு குத்தகைதாரர்களை முடிவு செய்யாமல், சுற்றியுள்ள மனிதர்கள், மற்ற குத்தகைதாரர்கள் கூறும் வாய்மொழி சாட்சியங்களை வைத்து குத்தகைதாரர்களின் உரிமையை உறுதி செய்ய சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டது.*

*குத்தகைதாரர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் கொடுக்கப்பட்டு, 7 லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்களைக் குத்தகைக்கு பகிர்ந்து அளித்ததாக அதிகாரப்பூர்வமாக கணக்கு சொன்னது.*

*1972-ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தை மீண்டும் திருத்தியமைத்தார் கலைஞர். அதன்படி, மாவட்ட வருவாய் அதிகாரிக்கு தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக வழக்குகள் அதிகரித்ததால், வருவாய் நீதிமன்றங்கள் எண்ணிக்கையும் 2-இல் இருந்து 5 ஆக உயர்ந்தன.*

*1972-ஆம் ஆண்டு இயற்றிய சட்டப்படி நிலுவையில் இருந்த பழைய குத்தகை நிலுவைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதாவது நில உச்சவரம்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட, 1971 ஜூன் 30-க்கு முன்னர் அனைத்து நிலுவைத் தொகையையும் தளர்த்தி குத்தகைதாரர்கள் நிலத்தின் மீது முழு உரிமையும் பெற வகை செய்தார் கலைஞர்.*

*‘உழுபவனுக்கே நிலம் சொந்தம்’ என்ற உரிமை முழக்கம் எழுப்பிய தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான், குத்தகைதாரர்கள் அதிகபட்சமாக 5 ஏக்கர் நிலத்துக்கு உரிமை கொண்டவர்களாக மாறினர். அதேநேரத்தில் நில உடைமையாளர்களும் 5 ஏக்கர் நிலத்தை தங்களது குத்தகைதாரர்கள் மூலம் பெற்று தங்களாகவே சொந்தமாக பயிரிட்டுக் கொள்ளவும் வகை செய்தார்.*

### நீளும் வழக்குகள்

*தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் நில உரிமை குத்தகைதாரர் பதிவுச் சட்டம், 1969 (Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969)-க்கு எதிரான வழக்குகள் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டன. அதேநேரத்தில், தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டத்தின்கீழ் 1969-ஆம் ஆண்டுமுதல், தற்போது வரை பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, தீர்வு அளிக்கப்பட்டுள்ளன. இப்போதும் சுமார் 7 ஆயிரம் வழக்குகள் உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.*

*குத்தகையாளர் வாரிசுகள் தங்கள் பெயரை பதிவேட்டில் சேர்க்கக் கோரி மனுத்தாக்கல் செய்வது, நிலத்தில் தொடர்ந்து விவசாயம் செய்தவர்களின் பெயர்கள் விடுபடுவது, நீதிமன்றம் நிலத்தைக் கைப்பற்றும்போது, சட்டப்படி குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் ஆகியவை குறித்து, நீதிமன்றங்களில் வழக்குகள் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பல வழக்குகளில் அரசு இன்றும் பதில் அளித்துக் கொண்டிருக்கிறது. குத்தகை நிலத்தை சட்ட உரிமையாக்கியவர் கலைஞர் என்பது காலத்துக்கும் நிலைத்து நிற்கும்.*

> “குத்தகை நிலத்தை சட்ட உரிமையாக்கியவர் கலைஞர் என்பது காலத்துக்கும் நிலைத்து நிற்கும்.”

...தொடரும்

## தமிழை விட தொன்மையானதா சமஸ்கிருதம்?

வலதுசாரிகள் போர்வையில் தொலைக்காட்சி விவாதங்களில் அமரும் சிலர், சமஸ்கிருதம்தான் இந்தியாவின் தொன்மையான மொழி என்று மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். இதுகுறித்து தனது சமுக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள கோகுல் பிரசாத் என்பவர், “சமஸ்கிருதம் பொ.யு.மு. 1500 முதல் 1200-ஆம் ஆண்டுக்குள் தோன்றியிருக்கலாம் என்பார்கள். இந்தக் காலக்கணக்கே தந்திரமாகப் பின்னோக்கி நகர்த்தப்பட்டது. அப்போது சமஸ்கிருதம் எழுத்து வடிவில் இருந்ததா எனச் சற்று அழுத்திக் கேட்டால் ‘வாய்மொழியாக’ என மெல்லிய குரலில் ஒப்புக்கொள்வார்கள். ரிக் வேதமோ புராணங்களோ சமஸ்கிருத மொழியில் பொ.யு. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டுக்குள் எழுதப்பட்டிருக்கவே வாய்ப்புகள் அதிகம்.

ஆனால், அதற்கு முன்பே தமிழுக்கு வரி வடிவம் வந்துவிட்டது. சமஸ்கிருதம் எந்தக் காலத்திலும் இந்திய நிலப்பரப்பில் பாதிப்பைச் செலுத்தியிருக்க முடியாது. அதற்கு புத்தரே ஆதாரம். சமஸ்கிருதத்தை ஒரு பொருட்டாகவே புத்தர் மதிக்கவில்லை. அவர் வாய்மொழியாக வேதம் பயின்றார் என ஊகிக்கிறார்கள். ஆனாலும், அவர் வேதங்களை முற்றாகவே புறக்கணிக்கிறார். ஏனெனில், அவற்றைப் பொருட்படுத்தி விவாதிக்கும் அளவுக்கு ஒரு சுக்கும் இல்லை என்பதே புத்தரின் அசைக்க முடியாத தீர்மானம்.

புத்தருக்குப் பிந்தி மூன்று நூற்றாண்டுகள் கழித்து வந்த அசோக பேரரசரும் பாகதத்தில்தான் (பிராகிருதம், பாலி) கல்வெட்டுகளை எழுதியிருக்கிறார். பொ.யு. முதலாம் நூற்றாண்டில் பௌத்தத்தில் Hybrid Sanskrit என்கிற மொழி புகுத்தப்பட்டது. மகாயான பௌத்தத்தின் சில பகுதிகள் இந்த மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. இது பௌத்த மதத்தைத் தழுவிய பிராமணர்களின் கைவேலையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் கலந்துள்ள வடமொழிச் சொற்களும் சமஸ்கிருதம் அல்ல. அவை பாகத மொழியிலிருந்து திராவிட மொழிக்குள் ஊடுருவி இருக்கவே அதிக வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில், அவற்றின் பெரும்பாலான வேர்ச்சொற்கள் பாகதத்தில் இருக்கின்றன. ஆக, எந்த வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் இந்தியாவின் தொன்மையான மொழி சமஸ்கிருதம் அல்ல. அது தங்களது மரபார்ந்த பிடிப்பை உதற முடியாத அசடுகளின் மூட நம்பிக்கை மட்டுமே” எனப் பதிவிட்டுள்ளார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்

### நான்கு மொழிகளில் வாக்கு சேகரித்தோம்!





1989-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் துறைமுகம் தொகுதியில் போட்டியிட்ட தானைத் தலைவர் கலைஞர், ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்ட தளபதி ஸ்டாலின், பூங்கா நகர் தொகுதியில் போட்டியிட்ட அண்ணன் ரகுமான்கான் ஆகியோருக்கு வாக்குச் சேகரிப்பில் நானும் ஈடுபட்டேன். சௌகார்பேட்டையில் ஜனதா தள நண்பர்களுடன் இந்தி, உருது, ஆங்கிலம், தமிழ் எனப் பல மொழிகளில் பேசி வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டது நல்ல அனுபவம். தேர்தலுக்குப் பின்னர், தலைவரைச் சந்திக்க கோபாலபுரம் சென்றபோது, வெற்றிவாகை சூடிய தளபதி ஸ்டாலின் வந்தார். அவருக்கு மாலை அணிவித்து, வாழ்த்தினோம். என்னுடன் ஜனதா தள நண்பர் பேராசிரியர் மகாவீர் சிங், உருது பேசி வாக்கு சேகரித்த நண்பர் தேவராஜ் ஆகியோரும் உடனிருந்தனர்.



கம்பம் மு.கலைக்கமால்

**- கம்பம் மு.கலைக்கமால்,**
**தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சியின் செயலாளர் அண்ணா!

1940-ஆம் ஆண்டு திருவாரூர் மாநாட்டுக்குப் பின், பெரியாருடன் முரண்பட்டு பொதுச்செயலாளர் பொறுப்பில் இருந்து விலகினார் நீதிக்கட்சிச் செயலாளராக இருந்த கி.ஆ.பெ.விசுவநாதம். அதன்பின்னர், பேரறிஞர் அண்ணா நீதிக்கட்சியின் செயலாளரானார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131